# உடன்பிறப்பே... 62

**நீரை.மகேந்திரன்**

திமு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த என்.பெரியசாமி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# ‘முரட்டு பக்தர்’ என்.பெரியசாமி!



முத்தமிழறிஞர் கலைஞரால் ‘எனது முரட்டு பக்தன்’ என மனதாரப் பாராட்டப்பட்ட தொண்டர். சுமார் 30 ஆண்டு காலம் தூத்துக்குடியைக் கட்டியாண்ட கழக மருது. கருப்பு சிவப்புக் கொடியை எளிய மக்களின் கலங்கரை விளக்கமாக மாற்றிய ‘என்.பி.’ என்கிற என்.பெரியசாமியின் செயல்பாடுகள் கழகத்தினருக்கு என்றென்றைக்குமான பாடம்.

கழகப் பணியிலும் - தொழிற்சங்கப் பணியிலும் தன்னை முழுநேரமாக ஒப்படைத்துக் கொண்ட உடன்பிறப்பு என தூத்துக்குடி என்.பெரியசாமியை, முத்தமிழறிஞர் கலைஞர் பலமுறை பாராட்டி இருக்கிறார். ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில், 1960-ஆம் ஆண்டு முதல் கழக உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டு களத்துக்கு வந்த பெரியசாமி, அப்போது முதல் தனது இறுதிக் காலம் வரை முத்தமிழறிஞர் கலைஞரின் தடம் மாறாத தொண்டராக முன் நின்றவர்.

## புதிரான அரசியல் களம்

தூத்துக்குடியின் அரசியல் களம் சாதாரண மானது அல்ல. அரசியல் பகையினால் எப்போதும் எதுவும் நடக்கலாம். அந்த நெருக்கடிகளில் பல உயிர் இழப்புகளையும் தூத்துக்குடியில் கழகம் சந்தித்துள்ளது.

1948-ஆம் ஆண்டு, **‘திராவிடர் கழக மாகாண மாநாடு’** தூத்துக்குடியில் நடை பெற்றபோது, மாநாட்டின் வெற்றிக்குக் காரணமாகத் திகழ்ந்தவர் தோழர் கே.வி.கே. சாமி. “திராவிட நாடு அமைந்தால், அதன் முதல் கவர்னர் ஜெனரல் பதவியை வகிக்கத் தகுதியுடைய ஓர் இளைஞரை தூத்துக்குடியில் கண்டேன். அவரின் பெயர் தோழர் கே.வி.கே.சாமி” என தந்தை பெரியாரால் பாராட்டப்பட்ட அவர், அன்றைய ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தின் கழகச் செயலாளர், கழக அமைப்புக் குழு உறுப்பினர் என பெரும் நம்பிக்கையாகத் திகழ்ந்தார்.

அவரையே 1956-ஆம் ஆண்டு பலிகொண்ட மண் தூத்துக்குடி. அப்படியான இடத்தில் இருந்து அரசியல் மாற்றங்களுக்காக உழைப்பது தன்னலம் கருதாத தியாகங்களுக்கு ஈடானது. அந்த வகையில், பெரியசாமி அவர்களின் உழைப்பும் பயணங்களும் கே.வி.கே.சாமி அவர்கள் வகுத்துத் தந்த பாதை எனலாம்.

## தேரியில் இருந்து நகருக்கு

1942-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் தேதி பிறந்தவர். என்.பி.யின் பெற்றோர் நாராயணன்-மாலையம்மாள். பெற்றோரின் சொந்த ஊர், சாத்தான்குளம் ஒன்றியம் தட்டார்மடம் கிராமம் ஆகும். தொழில் வாய்ப்பில்லாத தேரிக் காடு கிராமமான அந்த ஊரில் இருந்து, பெரியசாமி அவர்களின் 14 வயதில், அவரது பெற்றோர் தூத்துக்குடிக்கு இடம்பெயர்ந்தனர். அந்தக் காலகட்டத்தில்தான் கே.வி.கே.சாமி அவர்களின் படுகொலையை யொட்டி கழகத்தின் அரசியல் தீவிர மடைந்திருந்தது. தென்மாவட்டக் கழகங்களுக்கு பொறுப்பாளராக இருந்த கலைஞரின் தீவிரப் பிரச்சாரங்களில் ஈர்க்கப் பட்ட இளைஞராக, 1960 களில், தனது 18 வயதில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார் பெரியசாமி.

## தொழிற்சங்கவாதி

தொடக்கக் காலத்தில் பல்வேறு சிறு சிறு வேலை களைச் செய்துகொண்டே கழகப் பணிகளைச் செய்து வந்தவர் பின்னர், முழு நேரமாக தொழிலாளர்களி டையே கழகத்தை வளர்க்கும் களவீரராக நின்றார். தொழிற்சங்க உருவாக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இணையாக கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை உருவாக்கத்தில் அக்கறை கொண்டார் பெரியசாமி.

‘மதுரா கோட்ஸ்’ பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், ஸ்பின்னிங் மில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், உப்பு மற்றும் தலைச்சுமைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் உள்ளிட்ட 36 தொழிற்சங்கங்களில் தலைவர் மற்றும் செயலாளராகப் பதவி வகித்து, தொழிலாளர்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர் பெரியசாமி. அந்தப் பணிகளின்போதுதான் அவரது பெயரைச் சுருக்கமாக ‘என்.பி.’ என அழைப்பது வழக்கமானது.

## கழகத்தின் வளர்ச்சி

கழகம் ஒரு போராட்டத்தினை அறிவிக்கிறது என்றால், அந்தப் போராட்டத்துக்கு அணி திரட்டுவதில் என்.பி. அவர்கள் தனிமுத்திரை பதித்தவர். சிறை செல்லும் சூழல் அமைந்தால், கழகத்தினரை அரண்போலக் காத்து நிற்பார் என கழகத்தினர் நினைவு கூர்கின்றனர்.

> **“தூத்துக்குடி என்.பெரியசாமி அவர்கள் பிரிந்தாலும், அவரிடம் இருந்த கழக உணர்வு எப்போதும் தலைமுறை தலைமுறையாக நம்மிடையே தங்கிநிற்கும்!”**

1975-ஆம் ஆண்டில் தூத்துக்குடி நகருக்கு உட்பட்ட வட்டக் கழகப் பிரதிநிதியாக இருந்தபோது, மிசா நெருக்கடியில் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார். அந்தச் சிறைக் கொடுமை கள்தான் கலைஞரின் அன்புக்குப் பாத்திரமான தம்பியாக அவரை மாற்றிக் கொடுத்தது.

1977-ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தின் மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும், அதனைத் தொடர்ந்து 1982-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரை தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும் தேர்வானார் என்.பி.

1986-ஆம் ஆண்டில் நெல்லை மாவட்டம் பிரிக்கப்பட்டு, தூத்துக்குடி மாவட்டம் உருவானபோது, கட்சிக்கு வலுவான மாவட்டக் கழகச் செயலாளர் வேண்டுமென என்.பி அவர்களை மாவட்டச் கழகச் செயலாளராக உருவாக்கினார் கலைஞர். அன்று முதல் என்.பி. தனது இறுதிக் காலம் வரை சுமார் 30 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் பணியாற்றி, தூத்துக்குடி மாவட்டக் கழகத்தை உயிர்த் துடிப்புடன் வழிநடத்திச் சென்றார்.

## நகர்மன்றத் தலைவர்

1986-ஆம் ஆண்டு தூத்துக்குடி நகர்மன்றத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டு ஐந்து ஆண்டு காலம் கழகத்தின், கலைஞரின் நிர்வாகக் கலையை தூத்துக்குடி மக்களுக்கு எடுத்துக் காட்டியவர் என்.பி. அதன் தொடர்ச்சியாக 1989-ஆம் ஆண்டில் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பின ராகும் வாய்ப்பினையும் அளித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். 1996-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும், பெரியசாமி அவர்கள் வெற்றி பெற்று தூத்துக்குடியில் கழகத்தின் கொடி என்றும் உயர்ந்து நிற்பதை அறிவித்தார்.

1993-ஆம் ஆண்டு கழகத்துக்குச் சோதனை வந்த காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து, கழகத்தினர் கவனம் சிதறாமல் கட்டிக் காத்ததில் கலைஞரின் நம்பிக்கைக்கு நெருக்கமான தம்பியாக இருந்தார் என்.பி. தவிர, கழக ஆட்சிக்காலத்தில் தூத்துக்குடி மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் என்.பி. அவர்களின் பங்கு கணிசமாக இருந்தது.

## கலைஞர் விருது

கழகப் பணியில் நேரம் காலம் பார்க்காது ஓயாமல் உழைத்த என்.பி அவர்களின் தொண்டினைப் போற்றும் வகையில், 2016-ஆம் ஆண்டில் கழக முப்பெரும் விழாவின்போது கலைஞர் விருதினை தனது கரங்களாலேயே வழங்கிப் பெருமை சேர்த்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த விருது பெற்ற சில மாதங்களில் என்.பி என்கிற பெரும் தொண்டர், உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 2017-ஆண்டு மே 26 ஆம் தேதி தனது 76-வது வயதில், ‘கழகம், கலைஞர் எனத் துடித்த அந்த இதயம்’ உடல் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது. நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டு, கழகக் கொடிகளும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டு, அவருக்கு மரியாதை செய்தது கழகம்.

அப்போது கழகத்தின் செயல்தலைவராக இருந்த, இன்றைய முதலமைச்சர் அவர்கள் “என் மீது தனிப்பட்ட பாசத்தை வைத்திருந்த வர் அண்ணன் தூத்துக்குடி பெரியசாமி. பெருமைமிக்க தொண்டரை, போர்க்குணமிக்க மாவட்டச் செயலாளரை இழந்த சோகம் எங்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது” என இரங்கல் எழுதியதுடன், நேரில் சென்று இறுதி விடையளித்து வந்தார்.

“தூத்துக்குடி என்.பெரியசாமி அவர்கள் பிரிந்தாலும், அவரிடம் இருந்த கழக உணர்வு எப்போதும் தலைமுறை தலைமுறையாக நம்மிடையே தங்கிநிற்கும்” என அப்போது வெளியிட்ட இரங்கல் கடிதம் பரணி பாடியது.

உண்மைதான், அவருக்குப் பின் அவரின் குடும்பத்தினர் கழக அரசியல் களம் காண்பதும், மக்களிடம் பெயர் பெற்று விளங்குவதும் என்.பி. அவர்கள் மக்களிடம் கொண்டிருந்த அன்புக்குச் சான்று!

**...துடிக்கும்**

## மோடியின் பேச்சுக்கு மதிப்பில்லை!




தனது முதல் 10 ஆண்டு கால ஆட்சி யில் ஒருமுறைகூட பத்திரிகையாளர் களையே சந்திக்காதவர் பிரதமர் மோடி. ஆனால், தேர்தல் பரப்புரை காலத்தில் ஒவ்வொரு ஊடகமாக தேடித்தேடி, 70-க்கும் மேற்பட்ட நேர்காணல்களைக் கொடுத்தார். கேள்விகள் - பதில்கள் அனைத்தும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நாடகங்கள் என்கிற விமர்சனங்களும் எழுந்தன. அத்தகைய பேட்டிகளில், எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களின் மக்கள் நலத் திட்டங்களை தரக்குறைவாகவும் பேசி, எதிர்க்கட்சிகளின் கண்டனத்துக்கும் ஆளானதை அறிவோம்.

குறிப்பாக, தமிழ்நாடு, கர்நாடகா, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப்படும் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்துப் பயணத் திட்டத்தால், மெட்ரோ ரயில் சேவை குறைந்திருப்பதாக, எவ்வித ஆதாரமும் இல்லாமல் பொய்யைப் பரப்பினார். எந்தத் திட்டத்தை எதிர்த்து, மோடி ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களை வைத்தாரோ, அதே திட்டத்தை ஆந்திராவில் வாக்குறுதியாக அளித்திருக்கிறார் சந்திரபாபு நாயுடு. பா.ஜ.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் அவர், இப்போது ஆந்திராவில் ஆட்சியைப் பிடித்த கையுடன், மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து சேவையை அமல்படுத்த ஆயத்தமாகி வருகிறார். மோடியின் பேச்சை மதிக்க, அவரது கூட்டணிக் கட்சிகளே தயாராக இல்லை! மோடியிடம் மக்கள் நலன் குறித்த அக்கறையில்லை என அவரின் கூட்டாளிகளும் விரைவில் உணர்வர். அந்த நாளும் தொலைவில் இல்லை!

## :ப்ளாஷ்பேக்



### மனதில் மறையாதவர்கள்!



முனைவர் கோ.சண்முகவேலு

1991-ஆம் ஆண்டு கோவையில், தி.மு.கழக மாநாடு நடைபெற்றது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களுடன் புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தை, என் உறவினரான அன்பில் பொய்யாமொழி அவர்களிடம் கூறினேன். உடனே, தளபதி அவர்களும் இசைந்தார். இந்தப் புகைப்படத்தில் மறைந்த அன்பில் பொய்யாமொழியும், கரூர் முன்னாள் எம்.எல்.ஏ. மறைந்த வாசுகி முருகேசனும் உள்ளனர். அவர்கள் இருவரும் மறைந்தாலும், இந்தப் புகைப்படமும், அந்தப் பசுமையான நினைவும் என்றும் என் மனதை விட்டு நீங்காதவை.

**- முனைவர் கோ.சண்முகவேலு, சீனிவாசபுரம், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### விடுமுறை நாட்களில் மாநாடு!

1957-ஆம் ஆண்டு, டிசம்பர் 27 மற்றும் 28 தேதிகளில் நாகர்கோவில் அருகில் உள்ள கிருஷ்ணன்கோவிலில், நாஞ்சில் மாவட்டக் கழக மாநாடு நடைபெற்றது. வழக்கமாக கழக மாநாடுகள், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நிகழும். ஆனால், நாஞ்சில் மாவட்ட 2-வது மாநாடு வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற்றது. அதற்கு அடுத்த நாள் டிசம்பர் 29-ஆம் தேதி, கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

509

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131